**R 5859** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# முழுமையான சீர்க்கேடு எனும் உபதேசம் வேதவாக்கியங்களுக்கு முரணானது.

இப்பொழுது நாம் ஆரம்பக்கால சீர்த்திருத்தவாதிகளினால் முழுமையான ஒழுக்கக்கேடு/ சீர்க்கேடு எனும் உபதேசம் பரப்பிவிடப்பட்டபோது, அவர்களில் சிலருடைய மனங்களில் காணப்பட்டதும், தற்காலத்தில் அநேகரினால் கோட்பாடாக ஆதரிக்கப்படுகிறதும், நாம் மறுத்துக் கருத்துத் தெரிவிக்கிறதுமான கருத்திற்கு வருகின்றோம். ஆதாமின் மீறுதல் காரணமாய்ப் பரவலாய் மனுஷகுடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினனையும் பாதிப்பிற்குள்ளாக்கும் விதத்தில் பரவலாய்ச் சீர்க்கேடு உண்டானது என்றும், இதனால் "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்றும் வேதவாக்கியங்களோடுகூட நாமும் முன்வைக்கின்றோம். "எல்லாரும் வழிவிலகி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மை செய்கிறவன்இல்லை, ஒருவனாகிலும் இல்லை" (சங்கீதம் 14:3). "அந்தப்படியே நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (உரோமர் 3:10 ). ஆனால் இந்தச் சீர்க்கேடானது முழுமையானது என்பதை நாம் மறுக்கின்றோம்; மனித குடும்பத்திலுள்ள எந்த ஒரு நபரும் முற்றும் முழுமையாக, அனைத்திலும், எந்த ஒரு நல்லவைகள் அல்லது பாராட்டத்தகுந்தவைகள் இல்லாமல் சீர்க்கெட்டுப் போய்விட்டனர் என்பதை நாம் மறுக்கின்றோம். முழுமையாய்ச் சீர்க்கெட்டுப்போனவர் என்று நாம் அறிந்திருக்கும் ஒரே நபர் - பொய்க்கும், சகல பொல்லாப்புகளுக்கும் பிதாவாகிய சாத்தானேயாவார்.

பரவலான சீர்க்கேடும் மோசந்தான்; மிகவும் பரவலாய் இருக்கின்றபடியால், எந்த மனுஷனும் அவன் தன்னில் சுதந்தரித்துக்கொண்டதும், வளர்த்துக்கொண்டதுமான சீர்க்கேட்டினைக் கண்டுகொள்வதற்கும், தன் சக மனுஷர்களிடத்திலுள்ளவைகளைக் கண்டுகொள்வதற்கும் சிரமப்படுகிறதில்லை. சிலர் வேறு சிலரைக்காட்டிலும் அதிகமாய்ச் சீர்க்கெட்டிருப்பார்கள்; சிலர் தங்களுடைய சுபாவத்திலும், குணலட்சணத்திலும் தேவனுடைய ஆதி சாயலைக் கொஞ்சம் மங்கலடையப்பெற்றவர்களாகவும், அழிக்கப்பெற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். நாம் "துர்க்குணத்தில் உருவானோம்" என்றும், "எல்லாவற்றைப்பார்க்கிலும் மனிதனுடைய இருதயமே திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமாயிருக்கிறது" என்றுமுள்ள வேதவாக்கியங்களின் அறிக்கைகளுக்கு இசைவாகப் பார்க்கப்படுகையில், சீர்க்கேட்டினை அடையாளம் கண்டுகொள்வதற்குத் தங்கள் கண்களைத் திறக்கப்பெற்ற ஒவ்வொரு சிந்திக்கும் நபரினாலும், அந்தச் சீர்க்கேட்டினை எங்கும் கவனிக்கூமுடியும் சிறுபிள்ளைகளிடத்திலும்கூடக் கவனிக்கமுடியும். சுயசித்தம், மூர்க்கத்தனமான பிடிவாதம், கோபம் ஆகியவை பிறந்து சில வாரங்களே ஆன குழந்தைகளிடம் அடிக்கடி பார்க்கமுடிகின்றது. திருத்திடுவதை அவசியமாக்கிடும் இந்தத் தன்மைகளானது, பெற்றோரிடமிருந்தே குழந்தைகளுக்கு வந்துள்ளது என்பதைப் பெற்றோர் நினைவுகூருகையில், இது பெற்றோர் குழந்தைகளைத் திருத்த முற்படுகையில் அவர்களை மிகவும் பொறுமைகொள்ளவும், அதேசமயம் திருத்தம் செய்யும் விஷயத்தில் மிகவும் அக்கறையாயும் உறுதியாயும்/விழிப்பாயும் இருக்கச் செய்யும். இவ்வாறாகக் கிறிஸ்தவ பெற்றோர் தன் பிள்ளையைப் பயிற்றுவிக்க வேண்டிய விதத்தில் பயிற்றுவிப்பதில் மிகவும் உறுதியாய் இருப்பது மாத்திரமல்லாமல், இந்தப் பயிற்சியினையும், திருத்தம் செய்தலையும் வழங்குவதில் மிகவும் இரக்கத்தோடும், அன்போடும், பொறுமையோடும் காணப்படவேண்டும்.

---------------------------